FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081690

1. District : மாவட்டம் Dharmapuri PS: காவல்நிலையம் V 4 A C Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 02/AC/2025 Date: நாள் 26.05.2025

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23.05.2025 at 12.10 hrs, Date to : நாள் வரை 24.05.2025 at 14.15 hrs & 26.05.2025 at 09.40 hrs & 11.35 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.05.2025 Time : நேரம் 12.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Oral

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Palacode Police Station, Palacode Sub-Division, Dharmapuri District. about 25 kms North

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Sakthikumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Madhappan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி No. 4/51, Mathaneri Kottai Village, Hanumanthapuram (PO), Karimangalam (Tk), Dharmapuri District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Suresh, Head Constable, Palacode Police Station, Palacode Sub-Division, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.முருகன் 26/05/2025

26/05/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.05.2025 at 15.00 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
V & AC,
DHARMAPURI

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/AC/2025, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி .

*****

இன்று 26.05.2025 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், அனுமந்தபுரம் அஞ்சல், மதனேரிகொட்டாய் கிராம் கதவு எண்.4/51 ல் வசிக்கும் மாதப்பன் மகன் திரு.M.சக்திகுமார், வயது–24 என்பவர் அலுவலகம் வந்து வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், மதனேரிகொட்டாய் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகிவிட்டது. நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு படிக்க தெரியும். ஆனால் சரியாக எழுத வராது. எனக்கு சிறு சிறு ஒயரிங் மற்றும் பிளம்பிங் வேலைகள் தெரியும். அதனால் கேட்பவர்களுக்கு வேலை செய்து தருவேன். 2021 –ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒருநாள் நான் சொந்த வேலையாக ஓசூர் சென்றுவிட்டு வேலை முடித்து மீண்டும் திரும்பி எங்க ஊருக்கு வரவேண்டி, அன்று இரவு சுமார் 07.30 மணிக்கு அண்ணாமலைஅள்ளி பஸ்டாப்பிற்கு வந்து நின்றிருந்தேன். அப்போது அங்கு வந்த அண்ணாமலைஅள்ளியைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் சத்தியவாணி என்பவரின் கணவரும், எனக்கு தெரிந்தவருமான இளங்கோ என்பவர் பைக்கில் வந்து என்னிடம் அவரது பைக்கில் உட்காருமாறும், தெரு பைப்பை சரி செய்ய வேண்டும் என்று கூறி என்னை அழைத்து கொண்டு அண்ணாமலைஅள்ளியில் உள்ள இந்திரா என்பவரது வீட்டிற்கு அருகே சென்று வண்டியை நிறுத்திவிட்டு, அங்கிருந்த ஒரு தெரு பைப்பை காட்டி, அந்த பைப் டேமேஜ் ஆகியுள்ளதாகவும் அதன் மூலம் தண்ணி வீணாவதாகவும் அந்த பைப்பை சரிசெய்யுமாறும் என்னிடம் சொன்னார். நான் அந்த பைப்பை சரிசெய்து கொண்டிருந்தபோது அந்த பைப்பிற்கு அருகே குடியிருக்கும் இந்திரா மற்றும் அவரது மகள் நிஷா ஆகியோர் வந்து இளங்கோவிடம் எங்க பைப்பை நாங்களே சரிசெய்துக் கொள்கிறோம் என்றும், நீங்கள் சரி செய்ய தேவையில்லை என்றும், உங்களுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்தும், மேலும் பிரச்சனை செய்ய வந்துள்ளாயா என்று கேட்க, அவர்களுக்கும் இளங்கோவிற்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அவர்களது சொந்த பிரச்சனையை வைத்து சண்டை செய்ததால் நான் அங்கிருந்து புறப்பட்டு எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். பிறகு இரண்டு நாட்கள் கழித்து இளங்கோ மீதும், என் மீதும் பைப்பை உடைத்து சேதப்படுத்திவிட்டதாக இந்திரா மகள் நிஷா கொடுத்த கம்ளைண்ட் பேரில் பாலக்கோடு போலிஸ் ஸ்டேசனில் கேஸ் போட்டுள்ளதாக கேள்விபட்டேன். அதன்பிறகு இளங்கோவை போலிஸ் பிடித்து சென்றுவிட்டதாக தெரிந்துக்கொண்டேன். மேலும், நான் எந்த தவறும் செய்யாததால், அந்த கேஸ் சம்மந்தமாக போலிஸ் என்னை இதுநாள் வரை ஒரு முறைகூட

விசாரிக்கவில்லை. இந்நிலையில், 23.05.2025–ம் தேதி மதியம் சுமார் 12.10 மணிக்கு அண்ணாமலைஅள்ளியைச் சேர்ந்த குமார் என்பவர் அவரது செல்போன் எண்.9487038390–லிருந்து எனது செல்போன் எண்.8870340817–க்கு போன் செய்து அவர் பாலக்கோடு போலிஸ் ஸ்டேஷனில் இருப்பதாகவும், கம்ப்யூட்டர் போலிஸ் ஏட்டு சுரேஷ் பேசுவதாக சொல்லி அவரிடம் போனை கொடுத்தார். அப்போது ஏட்டு சுரேஷ் அவர்கள் என்னிடம் 2021 –ம் ஆண்டு உன்மீதும், இளங்கோ மீதும் பாலக்கோடு காவல் நிலையத்தில் கேஸ் நெம்பர் 417/2021–ல் கேஸ் போட்டுள்ளார்கள். அந்த கேஸ்ல உன்னை கைது செய்ய சொல்லி என்னிடம் உத்தரவு கொடுத்துள்ளனர். உன்னை கைது செய்யாமல் பெயிலில் நானே விட்டுவிடுகிறேன் அதனால் இரண்டு பேரை கூட்டிக் கொண்டு அவர்களது ஆதார்கார்டுடன் சாயங்காலம் 4 மணிக்கு போலிஸ் ஸ்டேஷன் வந்து என்னை பார் என்றும், 10 நிமிடத்தில் வேலையை முடித்து அனுப்பிவிடுகிறேன் என்றும், அதற்குண்டான பார்மாலிட்டிஸ் செய்ய வேண்டும் என்றும், அதை குமார் சொல்லுவார் என்றும் சொல்லி போனை குமாரிடம் கொடுத்தார். அப்போது குமார் என்னிடம், உன்னை பெயிலில்விட ஏட்டு சுரேஷ் அய்யா ரூ.15,000/– ம் கேட்கிறார் என்றார். நான் அதற்கு குமார் அவர்களிடம், நான் எந்த தப்பும் செய்யவில்லை என்று சொன்னேன். அப்போது குமாரிடம் இருந்து போனை வாங்கி ஏட்டு சுரேஷ் என்னிடம், தப்பு செஞ்சியோ இல்லையோ கேஸ் போட்டிருக்காங்க, ரூ.15,000/– ஐ கொடுத்துவிட்டு, கேஸை முடித்துக் கொள் என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது என்று சொன்னேன். அப்போது ஏட்டு சுரேஷ் அவர்கள் என்னிடம், சரி ரூ.10,000/– ம் கொடுத்து சாயங்காலம் 4 மணிக்கு சாட்சிகள் இரண்டு பேருடன் வந்து வேலையை முடித்துக் கொள் என்றும், இல்லையென்றால் அரஸ்ட் செய்துவிடுவோம் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். பிறகு சற்று நேரத்தில் ஏட்டு சுரேஷ் அவர்கள் 8248138881 என்ற செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போனுக்கு போன் செய்து அதுதான் அவருடைய போன் நெம்பர் என்றும், போலிஸ் ஸ்டேஷன் வரும்முன் அந்த நெம்பருக்கு போன் செய்துவிட்டு வருமாறு சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்பிறகு அன்று சாயங்காலம் சுமார் 5.30 மணிக்கு ஏட்டு சுரேஷ் அவர்கள் எனக்கு போன் செய்து என்னிடம், சொன்னபடி சாயங்காலம் 4 மணிக்கு ஏன் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான், பணம் ரெடியாகவில்லை சார் பணம் ரெடிபண்ணிகிட்டு நாளை வருகிறேன் என்று சொன்னேன். அதன்பிறகு, 24.05.2025–ம் தேதி காலை 09.30 மணிக்கு ஏட்டு சுரேஷ் எனக்கு போன் செய்து, தான் கேட்ட பணம் ரெடியா என்றும், சீக்கிரம் போலிஸ் ஸ்டேஷன் வருமாறும் சொன்னார். அதற்கு நான், சார் இன்னும் பணம் ரெடியாகவில்லை ஒருநாள் டைம் கொடுங்க சார் என்றேன். அவர் எதுவும் சொல்லாமல் போனை வைத்துவிட்டார். பிறகு அன்று மதியம் சுமார் 02.15 மணிக்கு ஏட்டு சுரேஷ் அவர்கள் எனக்கு போன் செய்து, சரி ஒருநாள் மட்டும் விடுகிறேன், 26.05.2025–ம்

தேதி திங்கட்கிழமை கண்டிப்பாக தான் கேட்ட பணம் ரூ.10,000/–த்துடன் வந்து தன்னை பாலக்கோடு போலிஸ் ஸ்டேஷனில் சந்திக்குமாறும், வேலையை முன்கூட்டியே முடித்து வைக்க இரண்டு சாட்சிகள் மற்றும் எனது ஆதார்கார்டுகளை அவருக்கு வாட்ஸ்ஆப் அனுப்புமாறும், வக்கீல் மூலம் போனால் 5 ரூபாய் செலவாகும் என்று சொன்னார். அதன்படி, நான் 25.05.2025–ம் தேதி ஆதார்கார்டுகளை சுரேஷ் அவர்களுக்கு வாட்ஸ்ஆப் அனுப்பி வைத்தேன். இன்று 26.05.2025 –ம் தேதி காலை சுமார் 09.40 மற்றும் 11.35 மணிக்கு ஏட்டு சுரேஷ் எனக்கு போன் செய்து தான் கேட்ட பணம் ரூ.10,000/– ஐ எடுத்துக் கொண்டும், இரண்டு சாட்சிகளிடம் ஆதார்கார்டுகளில் கையெழுத்து வாங்கிக் கொண்டும் உடனே ஸ்டேஷன் வந்து தன்னை பார்க்குமாறும் சொன்னார். பாலக்கோடு போலிஸ் ஸ்டேஷனில் வேலை பார்க்கும் ஏட்டு திரு.சுரேஷ் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/–த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, ஏட்டு திரு.சுரேஷ் அவர்கள் என்னிடம் கேட்ட பணம் ரூ.10,000/–த்துடன் இன்று 26.05.2025 –ம் தேதி அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே, ஏட்டு திரு.சுரேஷ் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். படித்து பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு ஒப்பம் M.சக்திகுமார், 26.05.2025 Sir, The oral statement of the informant was recorded by me in the office computer on 26.05.2025 between 12.00 hrs and 12.30 hrs and read it over to him which is admitted to be correct. Further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his statement is genuine. Therefore, a case in Dharmapuri Cr.No.02/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 26.05.2025 at 13.00 hrs against the accused. The original FIR and the statement of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

26/05/2025

(G.PERUMAL)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.